# குமாரசாமி தமிழ்ப் பள்ளி

## செய்தி மடல்

*ஏப்ரல் 2015. மலர் 1, இதழ் 1.*




அனைவருக்கும் இதயம் கனிந்த **தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற நம் முன்னோர்களின் வாக்கிற்க்கு இணங்க, அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடனும், மிகுந்த மன மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகிறோம்.

ஒரு சிறு செய்தி. இந்த வருடம் ஆங்கில வருடக் கணக்கில் 2015-ஆக இருந்தாலும், நமது தமிழ் வருடக் கணக்கு, திருவள்ளுவர் பிறந்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. ஆக, இது நமக்கு 2046-ஆம் ஆண்டு (2015 + 31).

அதோடு, இந்த வருடத்தின் பெயர், 'மன்மத' வருடமாம். இப்படி வருடங்களுக்கு பெயர் வைக்கும் பழக்கம், வேறு எங்காவது இருக்கான்னு Google பண்ணி பார்த்தப்போ (அது சரி, Google - ல எல்லாமே இருக்கா என்ன?), நம்மைத் தவிர, China-விலும் இருக்கு,உள்ளே..

## அழகிய தமிழ் மகன் - *'பட்டுக்கோட்டை'* கல்யாண சுந்தரனார்



**பாட்டுக்கோட்டையார்** என்றும், **பட்டுக்கோட்டையார்** என்றும் தமிழர்களால் அன்புடன் நினைவுக் கூறப்படும் **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்**, ஒரு சிறந்த தமிழ் அறிஞராகவும், சிந்தனையாளராகவும், திரைப்பட பாடலாசிரியராகவும் திகழ்ந்தவராவார்.

இவரது பெரும்பாலான பாடல்கள் எளிமையான தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்தி இயற்றப்பட்டவையாகும். இவருடைய பாடல்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டின் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள சங்கம் படைத்தான் காடு என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோரின் இளைய மகனாக **ஏப்ரல் 13, 1930-ல்** எளிய விவசாய குடும்பத்தில் பிறந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், திராவிட இயக்கத்திலும், கம்யூனிச சித்தாந்தத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய,உள்ளே..






## *நீங்கள் >>>*

- கவிதை எழுதுவதில்/வாசிப்பதில் விருப்பம் உள்ளவரா?
- தமிழில் கட்டுரை, மற்றும் துணுக்குகள் எழுதும் ஆர்வம் உள்ளவரா?
- ஓவியம் வரைவதில் ஆற்றல் பெற்றவரா?

## *உங்கள்...*

படைப்புகள் நம் செய்தி மடலில் இடம் பெற வேண்டுமா?

நீங்கள் படித்த, கேட்ட, வாசித்த, ரசித்த தமிழ்ப் படைப்புகளை, நம் பள்ளி மின்னஞ்சல் முகவரிக்கு (contact@sbtamilschool.org) அனுப்பி வைக்கலாம்.

## முக்கிய நாட்கள்

1. **ஏப்ரல் 18, 2015:** நம் தமிழ்ப் பள்ளி வலைப் பக்கம் துவக்க விழா.
2. **ஜூன் 6, 2015:** நம் பள்ளி ஆண்டு விழா.

## பார்த்தது... படித்தது.. கேட்டது...

பொதுவாக மொழிகளில், பெரும்பாலும் ஒரு சொல் வேண்டுமானால் ஒன்றுக்கும் மேல் அர்த்தங்களைக் கொடுக்கும். உதாரணமாக, **Present** என்ற ஆங்கிலச் சொல் '**பரிசு**' மற்றும் '**நிகழ்காலம்**' என இரண்டு அர்த்தங்களை, அதைப் பயன்படுத்தும் இடத்திற்க்கு ஏற்ப, கொடுக்கும். நமது தமிழிலும், '**மதி**' என்ற சொல், '**நிலவு**' மற்றும் '**அறிவு**' என்று இரண்டு பொருள்களைக் கொடுக்கும். இப்படி, எவ்வளவோ உதாரணங்களைச் சொல்லலாம்.

சரி விஷயத்துக்கு வருவோம்... சமீபத்தில், ஒரு தமிழ் பாடலைப் படிக்க நேர்ந்தது. முழுப்பாடலுமே ஒன்றுக்கும் மேற்ப்பட்ட, முற்றிலும் வேறு வேறு பொருள்களைக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப், உள்ளே..

## தமிழுக்கு அமுதென்று பேர்..!!! *- பாரதிதாசனார்*

குமாரசாமி தமிழ்ப் பள்ளி

Crossroads Middle School (North Campus)

635, Georges Road, South Brunswick NJ 08852

732-392-6224

contact@sbtamilschool.org

www.sbtamilschool.org

நன்றி!!!